பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 03 2024 6 45

வியாழக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- நாடு கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- நாட்டின் நலன் கருதி திமுக, கூட்டணி அமைத்துள்ளதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- திமுக-வின் தேர்தல் வாக்குறுதிகளை நம்பி மக்கள் இனியும் ஏமாறமாட்டார்கள் என பிஜேபி தெரிவித்துள்ளது.
- திமுக ஆட்சியில் மாநிலத்தில் விலைவாசி அதிகரித்துள்ளதாகவும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அஇஅதிமுக குற்றம்சாட்டியுள்ளது.
- சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், பிரியன்ஷு ரஜாவத், லக்ஷயாசென், பி வி சிந்து ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

*------ இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

நாடு கடந்த 10 ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை கண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தில்லியில் தனியார் தொலைக்காட்சி சார்பில் நடைபெற்ற மாநாட்டில் பங்கேற்றுப் பேசிய அவர், கடந்த 10 ஆண்டுகளில் 25 கோடி பேர் வறுமையில் இருந்து மீண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்த 25 ஆண்டுகளின் வளர்ச்சிக்கான அடித்தளமாக கடந்த 10 ஆண்டு திட்டங்கள் அமைந்துள்ளன என்றார்.

ஒட்டுமொத்த உலகமும் 21-ஆம் நூற்றாண்டை இந்தியாவின் நூற்றாண்டாக கருதுகிறது என்றும் பிரதமர் கூறினார்.

தமது வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் உத்தரவாதங்களாகவே அமைந்துள்ளன என்று திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டின் நலன் கருதி திமுக கூட்டணி அமைத்துள்ளதாக அக்கட்சியின் தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிஜேபி தலைமையிலான அரசு அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாகக் குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

திமுக-வின் தேர்தல் அறிக்கை வெற்றுக்காகிதம் என்று பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஏற்கனவே சட்டப்பேரவைத் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று கூறியுள்ளார்.

மக்கள் இனியும் திமுக-வை நம்பமாட்டார்கள் என்றும் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஹர்தீப்சிங் பூரி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பெட்ரோல், டீசல் விலை, தமிழகத்தைவிட பிஜேபி ஆளும் மாநிலங்களில் குறைவாக உள்ளது என்று கூறியுள்ளார்.

வாட் வரியை திமுக அரசு குறைக்கவில்லை என்று திரு ஹர்தீப்சிங்பூரி குற்றம்சாட்டியுள்ளார்.

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தலில் அஇஅதிமுக மக்களுடன் கூட்டணி அமைத்துள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், கூட்டணியை மட்டுமே நம்பி செயல்படும் கட்சி அஇஅதிமுக அல்ல என்று தெரிவித்தார்.

திமுக-வின் மூன்று ஆண்டு கால ஆட்சியில் மாநிலத்தில் விலைவாசி அதிகரித்துள்ளதாகவும், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

திமுக கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழகத்தின் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் நேற்று வேட்புமனு தாக்கல் தொடங்கி உள்ள நிலையில், பிரதான அரசியல் கட்சிகள் வேட்பாளர்களை இறுதி செய்து அறிவிக்கத் தொடங்கியுள்ளன.

திமுக கூட்டணியில் திமுக, கம்யூனிஸ்ட் கட்சிகள், மதிமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி உள்ளிட்ட கட்சிகள் வேட்பாளர்களை ஏற்கனவே அறிவித்துள்ளன.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர்களை கட்சி தலைமை விரைவில் அறிவிக்கும் என்று அக்கட்சியின் மாநில தலைவர் திரு செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

அஇஅதிமுக கூட்டணியில், கூட்டணிக் கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு முடிவடைந்துள்ள நிலையில், முதல்கட்ட வேட்பாளர் பட்டியலை அஇஅதிமுக வெளியிட்டுள்ளது.

அடுத்த பட்டியல் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என அக்கட்சி தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பிஜேபி தலைமையிலான கூட்டணியில் பாமக, அமமுக உள்ளிட்ட கட்சிகளுக்கான தொகுதி பங்கீடு முடிவடைந்துள்ளன.

தமாக உள்ளிட்ட கட்சிகளுடன் தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தை விரைவில் முடிவுக்கு வரும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதனிடையே அரசியல் கட்சிகள் தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கியுள்ளன.

**[]<<<>>>[]**

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுவுடன் மருத்துவ பரிசோதனை அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது என சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா மற்றும் நீதிபதி திரு பரத சக்ரவர்த்தி அடங்கிய அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தபோது, தேர்தல் ஆணையத்தின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மருத்துவ அறிக்கை என்பது சம்பந்தப்பட்டவரின் தனிப்பட்ட விஷயம் என்று கூறினார்.

தற்போதைய நிலையில் இதனை கட்டாயப்படுத்த முடியாது எனவும், இதற்கு சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென்றும் தேர்தல் ஆணையம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாநிலம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னையில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாநகராட்சி ஆணையருமான திரு ஜெ ராதாகிருஷ்ணன் பங்கேற்று வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேனியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஷஜீவனா தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பஙகேற்ற முதல் முறை வாக்காளர்கள், இந்த தேர்தலில் வாக்களிப்பதை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாக தெரிவித்தனர்.

*( சவுண்ட்பைட் - மாணவர்கள் ) -26—செகண்ட்*

**[]<<<>>>[]**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி ராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 7 பேரை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

ராமேஸ்வரத்லிருந்து விசைப் படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

மீனவர்களின் இரண்டு படகுகளையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

உலக பிரசித்திபெற்ற திருவாரூர் அருள்மிகு தியாகராஜர்சுவாமி கோவில் ஆழித் தேர்திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெறுகிறது.

இன்று காலை எட்டு மணி அளவில் தொடங்கும் இந்த மிக பிரமாண்டமான ஆழித்தேர் திருவிழாவில் ஏராளமான மக்கள் பங்கேற்று தேரை வடம்பிடித்து இழுப்பார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்,

*( வாய்ஸ்பைட் - விஜயகுமார் ) ---44 செகண்ட்*

[]<<<>>>[]

ஈராக்கில் உள்ள குர்தீஷ் நிலைகள் மீது துருக்கி போர் விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

[]<<<>>>[]

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் ஏற்பட்ட சுரங்க வெடி விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட பல்கேரிய கப்பலை இந்திய கடற்படை மீட்டதற்காக, அந்நாட்டு அதிபர் திரு ரூமென் ராதேவ், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு நன்றி தெரிவித்தார்.

[]<<<>>>[]

புதுதில்லியில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சத்குரு ஜக்கி வாசுதேவ்-வை பிரதமர் திரு நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு உடல் நலன் குறித்து கேட்டறிந்தார்.

[]<<<>>>[]

புதுதில்லியில் நடைபெற்ற கடற்படை தளங்களின் தளபதிகள் பங்கேற்ற மூன்று நாள் பயிலரங்கம் நேற்று நிறைவடைந்தது.

[]<<<>>>[]

தெலங்கானா மாநில ஆளுநகராக கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்ட ஜார்க்கண்ட் ஆளுநர் திரு சி பி ராதாகிருஷ்ணன் நேற்று ஹைதராபாத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

[]<<<>>>[]

சர்வதேச சுற்றுச்சூழல் நிலைத்தன்மை தொடர்பான இரண்டு நாள் மாநாடு புதுதில்லியில் நேற்று தொடங்கியது.

[]<<<>>>[]

தருமபுரி அருகே உரிய ஆவணங்களின்றி எடுத்துச் செல்லப்பட்ட 11 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணத்தை தேர்தல் பறக்கும் படையினர் நேற்று பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

திருவள்ளூர் மாவட்டம் புச்சிரெட்டிப்பள்ளி அருகே மலைப்பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை வனத்துறையினர் ஐந்து மணி நேரம் போராடி கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டம் கூடலூர் அருகே காட்டு யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்தார்.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டிகளையொட்டி சென்னை நகரின் சில இடங்களில் நாளையும், வரும் 26-ஆம் தேதியும் மாலை 5 மணி முதல் இரவு 11 மணி வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்படுவதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சுவிஸ் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் கிரண் ஜார்ஜ், பிரியன்ஷூ ரஜாவத், லக்ஷயாசென், பி வி சிந்து ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் கிரண்ஜார்ஜ் 21-18, 21-19 என்ற செட் கணக்கில் ஜப்பானின் டகுமா ஒபயாஷியை வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் பிரியன்ஷூ ரஜாவத் 21-12, 21-15 என்ற நேர் செட்களில் ஹாங்காங்கின் லீ சியுக் யூ-வை வீழ்த்தி காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்குத் முன்னேறினார்.

இந்தியாவின் லக்ஷயா சென் - மலேசியாவின் ஜுன் ஹோ லியோங்கை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்குத் தகுதி பெற்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி வி சிந்து, தாய்லாந்தின் சோய்கீவாங்கை 21-12, 21-13 என்ற செட் கணக்கில் வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறினார்.

கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சதீஷ்குமார் கருணாகரன் - ஆத்யா வரியத் இணை 21—18, 11—21, 21—19 என்ற செட் கணக்கில் மலேசியாவின் ராய் கிங் யாப் - வலேரி சியோவ் இணையை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

**[]<<<>>>[]**